# வணிக வரித்துறைக்கான வினாப்பட்டியல்

1) கேளிக்கை வரி விதிப்புமுறை குறித்து தயவு செய்து விவரிக்கவும்

2) இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் படி கேளிக்கை வரி வசூலில் 90 சதவீத தொகையினை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கிலும் காலமுறைப்படி சரிக்கட்டப்படுகிறதா?

3) தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு-Iக்கு திருத்தம் கொண்டுவரப்படாததால், 1997 முதல் 2002-ம் ஆண்டு வரை சரிக்கட்டப்படவேண்டிய கேளிக்கை வரி நிலுவைத் தொகைகள் உள்ளாட்சி மன்றங்களுக்கு சரிக்கட்டப்பட்டுவிட்டனவா? தயவு செய்து விவரங்கள் தரவும்.

4) 2000-2005ம் ஆண்டுகளில் கேளிக்கை வரியாக வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை (தொகையினை எந்த விரிவான கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்டது என்பதை குறிப்பிடவும்)

| வருடம் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | சிறப்பு ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | கிராம ஊராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2000-01 | | | | | | |
| 2001-02 | | | | | | |
| 2002-03 | | | | | | |
| 2003-04 | | | | | | |
| 2004-05 | | | | | | |

5) கீழ்க்கண்ட வருடங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சரிக்கட்டப்பட்ட தொகை

| வருடம் | தொகையினை சரிக்கட்டப்பட்ட நாள் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | சிறப்பு ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | கிராம ஊராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2000-01 | | | | | | | |
| 2001-02 | | | | | | | |
| 2002-03 | | | | | | | |
| 2003-04 | | | | | | | |
| 2004-05 | | | | | | | |

6) 2004-05 வரை (31.3.05ல்) கேளிக்கை வரி நிலுவை சரிக்கட்டப்படாமல் இருப்பின் அதன் விவரத்தை கீழ் காணும் உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக தெரிவிக்கவும்.

நிலுவைத்தொகை (ரூ ஆயிரத்தில்)

1) கிராம ஊராட்சிகள்
2) ஊராட்சி ஒன்றியங்கள்

3) சிறப்பு ஊராட்சிகள்
4) நகராட்சிகள்
5) மாநகராட்சிகள்

7) 1996ம் ஆண்டு வரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரவேண்டிய விற்பனை வரி மீதான மேல்வரி / கூடுதல் மேல் வரி ஆகியவை உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழுவதுமாக ஒப்படைக்கப்படாதது தொடர்பாக புகார் உள்ளது. அவ்வாறு இருப்பின் எவ்வளவு தொகை சரிக்கட்டப்படவில்லை அதற்கான காரணத்தையும் தெரிவிக்கவும்

8) சட்ட எண் 22/2002ன் மூலம் 1.7.2002 முதல் நடைமுறைக்கு வந்த பொது விற்பனை வரிச்சட்டம், 1959ன் பிரிவு 3 (1) இன்படி, பிரிவுகள் 3,3A,3B,3C,3D,3G,31,5,7A மற்றும் 7C ஆகியவற்றின் உட்பிரிவுக்கான 2, 2 (c) , 3 மற்றும் 5ன் படி பொருள்களின்மீது விதிக்கப்படும் வரியின் மீது மேல் வரி விதிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இம்மேல்வரி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கக் கூடியதா? இல்லையெனில் காரணங்களை கூறவும்.

9) கேளிக்கை வரிச்சட்டம் 1939ன்படி, தொலைக்காட்சி இணைப்புக்கான (Cable TV) கேளிக்கை வரி விதித்தல் மற்றும் வசூல் செய்வது உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 2003ம் வருடத்திய திருத்தச் சட்டத்தின்படி கேளிக்கை வரி விதிப்பு மற்றும் கேபிள் தொலைக்காட்சி நடத்துபவரிடமிருந்து வரியினை கீழ்க்கண்ட வீதப்படி வசூலிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
வருடத்திற்கு ரூ.12000/- - கிராம ஊராட்சிகள்
வருடத்திற்கு ரூ.18000/- - நகராட்சிகள்
வருடத்திற்கு ரூ.36000/- - மாநகராட்சிகள்

மேற்படி விகிதப்படி தொகையினை வசூல் செய்து, சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டதா?

10) மேற்படி வரி வீதத்தினை அதிகரிப்பதற்கு சட்டத்தில் ஏதேனும் வழிவகை உள்ளதா? அல்லது தற்போதைய வரி வீதம் நிரந்தரமானதா?

11) உள்ளாட்சி அமைப்புகளுக்கு கேளிக்கை வரியாக வசூலிக்கப்படும் தொகையைப் பிரித்தளிப்பது வெளிப்படையான தன்மை உள்ளதாக இருக்க வேண்டும், துறை மூலம் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகையினை உள்ளாட்சி அமைப்புகள் அறிந்து உண்மையிலேயே பெற வேண்டிய தொகையினை சரிசெய்ய இயலாத நிலை உள்ளது எனக் கருதப்படுகிறது. இதுகுறித்து தங்கள் கருத்து என்ன? தயவு செய்து குறிப்பிடுக.

12) இதர இனங்களின் மீது தாங்கள் கூற விரும்பும் கருத்துக்களைத் தெரிவிக்கவும்.